JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- - Pw- 5- Witness
for Prosecution

CC.No. 15/2024 Crime No. 163/2023 Station Appakoodal

| | | |
|---|---|---|
| Name | **Pw. 5 கிருஷ்ணமூர்த்தி** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 03.06.2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது சேலம் மாநகரம், சூரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி வட்டக்காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது, கடந்த 22.10.2023 ஆம் தேதியன்று ஆப்பக்கூடல் காவல் நிலைய தலைமை காவலர் சின்னண்ணன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த பொழுது, அந்தியூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பட்ட முத்துசாமி என்பவரது மகன் மயில்சாமி என்பவரது REFER TO GEMCH என்ற RTA இன்டிமேஷனை பெற்று பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது, மேற்படி பழனிச்சாமி என்பவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சையில் இருந்ததால் அவரிடம் வாக்குமூலம் பெற இயலாமல் திரும்பி நிலையம் வந்து பொது நாட்குறிப்பில் பதிவு செய்தேன்.

பின்னர் மறுநாள் 23.10.2023–ம் தேதியன்ற மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்த போது அங்கு மேற்படி மயில்சாமி என்பவர் தலையில் அறுவை சிகிச்சை செய்து மயக்க நிலையில் இருந்ததால், அவரது மகள் சாவித்திரி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து, நிலையம் வந்து நிலைய குற்ற எண் 163/ 2023, சட்ட பிரிவுகள் 279, 337 IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பை பெற்ற நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் குப்புசாமி என்பவர் அன்றைய தினம் பகல் 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளான குப்புசாமி மற்றும் முத்து நாயக்கர் ஆகியோர்கள் முன்னிலையில்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.06.03 17:27:46 +0530

சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி படமும் தயார் செய்தார். **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் சாவித்திரி, தேவராஜ், தம்பி, கலையான், மல்லிகா, மாரிமுத்து, குப்புசாமி மற்றும் முத்து நாயக்கர் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த விபத்தில் காயம் பட்ட மயில்சாமி என்பவர் கடந்த 30.10.2023 ம் தேதியன்று காலை 07.10 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக கிடைத்த இறப்பு இன்டிமேஷனை பெற்று வழக்கின் சட்ட பிரிவை சட்ட பிரிவுகள் 279, 337 இருந்து சட்ட பிரிவுகள் 279, 304(A) IPC ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை பின்னர் தொடர்பு புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்புவித்தார். வழக்குக் கோப்பை பெற்ற நான் சம்பவ இடம் சென்று பார்வையிட்ட போது, சம்பவ இடம் மாதிரி வரைபடத்துடன் ஒத்திருந்ததால் புதியதாக எதுவும் தயார் செய்யவில்லை. சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால், புதியதாக வாக்குமூலம் எதுவும் தயார் செய்யவில்லை. பின்னர் அன்றைய தினம் 13.00 மணிக்கு ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு பஞ்சாயத்துதாரர்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விபத்தில் இறந்து போன மயில்சாமி என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இறப்பின் மருத்துவ ரீதியான காரணத்தை அறியும் பொருட்டு பிரேதத்தை தலைமை காவலர் சின்னண்ணன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத விசாரணை சாட்சிகளான சரவணன், சண்முகம், தமிழரசு மற்றும் சரத்குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி சாவித்திரி என்பவரை மறுவிசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களில் இருந்தும் சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் 10.11.2023 ஆம் தேதியன்று ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி சிவா என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

பின்னர் சாட்சிகள் சண்முகம் மற்றும் நவீன் குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்தில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். 12.11.2023 ஆம் தேதியன்று சாட்சிகள் ராஜி மற்றும் அழகேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 30.11.2023ஆம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளர் சுரேந்திர குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் பெற்றேன். **TN 65 C 1902 என்ற பதிவு எண் கொண்ட யமஹா பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகவும், TN 39 J 5220 என்ற பதிவு எண் கொண்டTVS இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.03 17:27:51 +0530

பின்னர் அந்தியூர் அரசு மருத்துவமனையில் இறந்து போன மயில்சாமி என்பவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவர் விஜயா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன்.அந்தியூர் அரசு மருத்துவமனையின் **விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் மயில்சாமியின் இறப்பை உறுதி செய்த பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உதவி பேராசிரியர் கவிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எதிரி சிவா என்பவருக்கு சிகிச்சை அளித்த அந்தியூர் பாலாஜி மருத்துவமனை மருத்துவர் சண்முகசுந்தரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, கயாச்சான்று பெற்றேன். எதிரி சிவாவின் ஸ்ரீ பாலாஜி மருத்துவமனை வழங்கிய **காயச்சான்று அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் சின்னண்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து கடந்த 30.11.2023 ஆம் தேதியன்று எதிரி மீது சட்ட பிரிவுகள் 279, 304(A) IPC கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக ஆப்பக்கூடல் முதல் குணம் செல்லும் சாலை அதிக வளைவு உள்ள பகுதி மற்றும் குறுகிய சாலை என்றால், சரிதான். சம்பவம் நடைபெற்றது இரவு நேரம் என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால், சரியல்ல. நான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் இந்த குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.03 17:27:57 +0530

Sd/- (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani